## தென்மாகாணக் கல்வி அமைச்சு

### தென்மாகாண சபை தமிழ் மொழிப் பாடசாலைகளில் 26 பாடவிதானங்களில் நிழவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகள், தேசிய உயர்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் க. பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

தென்மாகாணக் கல்வியமைச்சின் கீழ் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் 26 பாடவிதானங்களில் நிழவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகள், தேசிய உயர்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் க. பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஆசிரிய சேவைப் பிரமாணங்களுக்குகேற்ப பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தகுதிவாய்ந்த பட்டதாரிகள், தேசிய உயர்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களிடமிருந்து நிகழ்நிலை (Online) மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை

2.1. தென் மாகாண சபை பாடசாலைகளில் நிழவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு குறித்த தகைமையினைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

2.2. 2008.07.01 தினத்தன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.4.4.1 பந்திக்கு அமைய தென்மாகாண கல்வியமைச்சினால் நடாத்தப்படும் சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அப்பரீட்சையிலும் தகுதி பெறும் விண்ணப்பதார் மட்டும் கீழே காணப்படும் வகையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

2.3 மேலே கூறப்பட்ட விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தன்று அரச சேவைகள் ஆணைக்குழுவின் பிரத்தியேக வெப்தளத்தினூடாகப் பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளில் இருந்து மேலே கூறப்பட்டுள்ள 2.2 ன் படி நடாத்தப்படும் சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரிசீலனையில் தகுதி பெறும் விண்ணப்பதாரர் தென்மாகாணத்தில் குறித்த பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த பிரதேச செயலகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் அப் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ள பாடசாலைகளில் நிழவும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு முதலிடம் வழங்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் குறித்த பிரதேச செயலகப் பிரிவினுள் போதுமான அளவு காணப்படாவிடின் (இந்த வர்த்தமானி அறிவித்தல் 7ல் 11 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி) முதலில் அருகிலுள்ள அடுத்த பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும், இரண்டாவது அதற்கடுத்த பிரதேசப் பிரிவுகளில் இருந்தும் என்ற அடிப்படையில் அருகாமையினை அடிப்படையாகக் கொண்டு தகுதி வாய்ந்த அபேட்சகர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

2.4 ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் அனைத்துக் கட்டங்களிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடத்தோடு தொடர்புடைய தமைமையினைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியிலிருந்து (இந்த வர்த்தமானி அறிவித்தல் 5.1 மற்றும் 5.2ல் குறிப்பிட்டுள்ளபடி) வகுப்புத் தேர்ச்சியுடன் கூடிய விண்ணப்பதாரரே முதலில் தெரிவு செய்யப்படுவர். பின்னர் முறையே பட்டதாரிகள், அதற்கடுத்ததாக தேசிய உயர்கல்வி டிப்ளோமாதாரிகள் மற்றும் அதற்கடுத்ததாக உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களை ஆசிரிய உதவியாளர்கள் என்ற வகையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

2.5 க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்க எதிர்பார்க்கப்படுவதோடு, அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் அவர்களது முதல் நியமன நாளிலிருந்து 5 வருடங்களுக்குள் தான் நியமனம் பெற்ற பாடத்திற்குத் தொடர்புடைய கல்வியமைச்சு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியப் பயிற்சி அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனமொன்றினால் குறித்த பாடத்தோடு தொடர்புடைய பட்டப்படிப்பொன்றை பூர்த்தி செய்தல் வேண்டும். அந்த ஆசிரியப் பயிற்சி

அல்லது பட்டப்படிப்பு செல்லுபடியாகும் திகதியிலிருந்து குறித்த ஆசிரிய உதவியாளர் இலங்கை ஆசிரியர் சேவை 3ம் வகுப்பு 1ம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவதோடு அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

ஐந்து வருடங்களுக்குள் மேலே 2.5 ல் குறிப்பிட்டுள்ள பிரகாரம் தகைமையினைப் பூர்த்தி செய்யத் தவறின் ஆசிரிய உதவியாளர் சேவையிலிருந்து முடிவுறுத்தப்படுவர்.

2.6 தென்மாகாண ஆசிரிய சேவை யாப்பின் 7.2.4.4.1 (1) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர்.

2.7 ஓய்வு பெறல், வேறு மாகாணங்களுக்கு மாற்றலாகிச் செல்லல், வேறு சேவைகளுக்கு பதவியுயர்வு பெறல் காரணமாக ஏற்படும் ஆசிரிய பெற்றிடங்களுக்கும் இதன் கீழ் பூரணப்படுத்த எதிர்பார்க்கப்படுவதோடு, அங்கு தோன்றும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்காக மேலே 2.1, 2.2, 2.3, 2.4, 2.5 மற்றும் 2.6 அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

## 03. சேவை நிபந்தனைகள்

3.1 இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வுதிய உரித்துடையதுமாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமை தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை சார் தீர்மானங்களுக்கு நீர் கட்டுப்படுத்தப்படுவீர்.

3.2 முதலில் நியமனம் பெறும் பிரதேச செயலகப் பிரிவில் குறைந்தது 05 வருடங்கள் சேவை செய்ய வேண்டும்.

3.3 அரச சேவைகள் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரச தாபனக் கோவை மற்றும் நிதி விதிமுறைகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படும்.

3.4 பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்கில் நடைபெறும்.

3.5 பட்டப்படிப்புடன் தொடர்பான பாடத்துக்கே விண்ணப்பிக்க வேண்டியதுடன், நியமனத்துக்குரிய பாடம் எந்தவித காரணத்துக்காகவும் மாற்றப்படமாட்டாது.

3.6 அரச நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

## 04. சம்பள அளவுத் திட்டம்

### 4.1 பட்டதாரி விண்ணப்பதாரிகள்

2016.02.25 திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 க்கு அமைய இப்பதவிக்கு உரித்தான சம்பளத் திட்டம் ஜீ.ஈ - 1- 2016 ஐக் கொண்ட சம்பள வகை (மாதாந்த சம்பளம் ரூ. 27,740. – 6*300 – 7*380 – 9*445 –36,205) ஆக அமையும். நீர் இந்த சம்பள அளவின் 14 வது கட்டமான ரூ. 32,200.00 மாதச் சம்பளத்திற்கு உட்படுகின்றீர். இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு காலாகாலம் அரசினால் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளுக்கும் நீர் உரிமைப்படுகின்றீர்.

### 4.2 டிப்ளோமாதாரி விண்ணப்பதாரர்

2016.02.25 திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 க்கு அமைய இப்பதவிக்கு உரித்தான சம்பளத் திட்டம் ஜீ.ஈ - 1- 2016 ஐக் கொண்ட சம்பள வகை (மாதாந்த சம்பளம் ரூ. 27,740. – 6*300 – 7*380 – 2*445 –33,090) ஆக அமையும். நீர் இந்த சம்பள அளவின் 07 வது கட்டமான ரூ. 29,540.00 மாதச் சம்பளத்திற்கு உட்படுகின்றீர்.

### 4.3 உயர்தரம் சித்தி பெற்ற விண்ணப்பதாரர் ( ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்தல்)

ஆசிரிய உதவியாளராக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்களாக மாதத்திற்கு ரூ. 10,000.00 கொடுப்பனவு வழங்கப்படும்.

05. கல்வித் தகைமைகள்

5.1 விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்திற்கு கீழே காணப்படும் தகைமைகள், 2017.08.29ம் திகதிக்குரிய கௌரவ அமைச்சரவையின் அனுமதி பெற்ற, ''இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 13 வது திருத்தத்தின் 111 வது பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி ஆசிரியர் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்'' என்ற தலைப்பில் கல்வியமைச்சர் 2017.07.20 திகதியன்று கௌரவ அமைச்சரவைக்கு முன்வைத்துள்ள அமைச்சரவை குறிப்பின் முன்மொழிவு இல 02ல் குறிப்பிட்டுள்ளபடி பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொடர் இல | பாடங்கள் | தகைமைகள் |
|---|---|---|
| 01 | ஆரம்பக் கல்வி | முழுப் பட்டப் படிப்பின் போதும் தமிழ் மொழி மற்றும் இலக்கியம் அல்லது தமிழ் மொழியியலில் இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 02 | இரண்டாம் மொழி – சிங்களம் | முழுப் பட்டப் படிப்பின் போதும் சிங்கள மொழியினை பிரதானமான பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முக்கிய பாடம் என்ற வகையில் தமிழ் மொழியில் விசேட சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசின் சட்டவாக்க நிறுவனமொன்றினூடாகப் பெறப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாத தமிழ் மொழி பற்றிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 03 | இரண்டாம் மொழி – தமிழ் | முழுப் பட்டப் படிப்பின் போதும் தமிழ் மொழியினை பிரதானமான பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முக்கிய பாடம் என்ற வகையில் சிங்கள மொழியில் விசேட சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசின் சட்டவாக்க நிறுவனமொன்றினூடாகப் பெறப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாத சிங்கள மொழி பற்றிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 04 | தமிழ் | முழுப் பட்டப் படிப்பின் போதும் தமிழ் மொழியினைப் பிரதான பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 05 | கணிதம் | க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் / விஞ்ஞானப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணிதத்தினை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானவியல் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். (க.பொ.த. உயர்தரம் வரை கணிதப் பாடத்தினைக் கற்பிக்கும் தகைமையைக் கொண்டிருத்தல்.) |
| 06 | விஞ்ஞானம் | க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் / விஞ்ஞானப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் /இரசாயனவியல் / உயிரியல் / தாவரவியல் / விலங்கியல் ஆகிய பாடங்களிலிருந்து குறைந்தபட்சம் ஒரு பாடத்தினையாவது பிரதான பாடமாகக் கொண்டு விஞ்ஞானவியல் பட்டமொன்றினைக் கொண்டிருத்தல். |
| 07 | ஆங்கிலம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |

| | | |
|---|---|---|
| 08 | சுகாதாரம் மற்றும் உடற்கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 09 | சித்திரம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சித்திரத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 10 | கர்நாடக சங்கீதம் | முழுப் பட்டப் படிப்பின் போதும் கர்நாடக சங்கீதத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட நுண்கலைப் பட்டம் பெற்றிருத்தல். / அழகியல் இளங்கலை அல்லது இளங்கலை விசேட (கர்நாடக சங்கீதம்) பட்டம் பெற்றிருத்தல். |
| 11 | நடனம் (பாரதீகம்) | முழுப் பட்டப் படிப்பின் போதும் பாரதீக நடனத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட நுண்கலைப் பட்டம் பெற்றிருத்தல். / அழகியல் இளங்கலை அல்லது இளங்கலை விசேட (பாரதீக நடனம்) பட்டம் பெற்றிருத்தல். |
| 12 | தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழிநுட்பத்தினை அல்லது கணனி விஞ்ஞானத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 13 | புவியியல் விஞ்ஞானம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து புவியியல் விஞ்ஞானம் என்ற பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 14 | இந்து சமயம் | முழுப் பட்டப் படிப்பின் போதும் இந்து சமயம் / இந்து நாகரீகத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 15 | வரலாறு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வரலாறு பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 16 | குடியுரிமைக் கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மானிடவியல் விஞ்ஞானம் / சமூக விஞ்ஞானம் அல்லது அரசியல் பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 17 | மாணவர் ஆலோசனை வழிகாட்டல் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உளவியல் விஞ்ஞானம் / ஆலோசனை பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சமூக விஞ்ஞானத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத ஆலோசனை சார் டிப்புளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல். |
| 18 | ரோமன் கத்தோலிக்கம் | முழுப் பட்டப் படிப்பின் போதும் ரோமன் கத்தோலிக்கத்தினை பிரதான பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 19 | அரபு | முழுப் பட்டப் படிப்பின் போதும் அரபு மொழியினைப் பிரதான பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 20 | இஸ்லாம் | முழுப் பட்டப் படிப்பின் போதும் இஸ்லாம் பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டம் பெற்றிருத்தல். |
| 21 | விசேட கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விசேட கல்வியினைப் பிரதான பாடமாகக் கொண்ட கல்வியியல் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |

| | | |
|---|---|---|
| | | அல்லது<br>தேசிய கல்வி நிறுவகம் / இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட விசேட கல்வி சார்ந்த டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல். |
| 22 | மனைப் பொருளியல் | இலங்கையின் உயர்கல்வி நிறுவனத்தில் நுகர்வோர் அறிவியல் மற்றும் தயாரிப்புத் தொழிநுட்ப டிப்ளோமா பாடநெறியினைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 23 | அரசியல் விஞ்ஞானம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அரசியல் விஞ்ஞானம் அல்லது சர்வதேசத் தொடர்புகள் பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 24 | வணிகக் கல்வி | க.பொ.த. உயர்தரத்தில் வணிகத் துறையில் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வணிகவியல் பட்டம் / வர்த்தக நிர்வாகம் / அரச நிர்வாகம் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 25 | பொருளியல் விஞ்ஞானம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொருளியல் விஞ்ஞானத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |
| 26 | கணக்கீடு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணக்கீட்டினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். |

**உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| | தமிழ் மொழியில் க.பொ.த. சாதாரண தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய் மொழி மற்றும் கணிதத்தில் சித்தியுடன் மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>கவனத்திற்கொள்க :-<br>1. விண்ணப்பதாரர் மூலம் விண்ணப்பிக்கப்படும் பாடம் க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தின் கீழ் சித்தியடைந்திருத்தல் கட்டாயமானது.<br>2. ஆரம்பக் கல்விக்காக க.பொ.த. உயர்தர பரீட்சையில் தமிழ் மொழி பாடத்தினைக் கற்றிருத்தல் கட்டாயமானது.<br>3. சுகாதாரம் மற்றும் உடற்கல்வி பாடத்திற்காக க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பதோடு, பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேசிய மட்ட வெற்றிகளை அடிப்படையாக வைத்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |

5.2 க.பொ.த. சாதாரண தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய் மொழி மற்றும் கணிதத்தில் சித்தியுடன் மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

5.3 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

06. வயதெல்லை :-

6.1 விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு (2021.10.22 அன்று) வயது

குறைந்த வயதெல்லை : 18 வருடங்கள்
உயர்ந்த வயதெல்லை : 35 வருடங்கள்

அந்த அடிப்படையில் 2003.10.22 ம் திகதி அல்லது அதற்கு முன்பு மற்றும் 1986.10.22 ம் திகதி அல்லது அதற்குப் பின்பு பிறந்த திகதியினைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்கான தகுதியினைக் கொண்டிருப்பர்.

07. வேறு தகைமைகள் :-

1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக தென்மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். அல்லது துணைவரின் மூன்று வருடங்கள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்துடன் விண்ணப்பதாரர் ஒருவருட நிரந்த வதிவிடத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

3. நன்னடத்தையும் உடலாரோக்கியமும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1 விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யும் போது பிரதேச செயலாளர் காரியால இலக்கத்தினை இனங்காண்பதற்காக உப இணைப்பு 01ல் உள்ள அட்டவணையை பயன்படுத்திக் கொள்ளவும். மேலும் தான் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அதன் இலக்கத்தினை விண்ணபத்தில் சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

8.2 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **2021.10.22** அன்று அல்லது அதற்கு முன்பாக தென்மாகாண கல்வியமைச்சின் பிரத்தியேக வெப்தளத்தில் நிகழ்நிலை (Online) ஊடாக (**www.edumin.sp.gov.lk**) முன்வைக்கப்படல் வேண்டும். குறித்த விண்ணப்பம் உம்மால் சரியாக பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் வன் பிரதியினை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். அதனை பாதுகாப்பாக கைவசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

8.3 ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பப்படிவமே முன்வைக்க முடிவதோடு, இரண்டு பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

8.4 விண்ணப்பம் செய்யப்படும் பாடங்களை எக்காரணங்கள் கொண்டும் மாற்றிக் கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது, மட்டுமன்றி அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் முறையீடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8.5 பரீட்சைக் கட்டணமாக ரூ. 1,000.00 தொகையினை நேர்முகப் பரீட்சைக்காக வரும் வேளை தென்மாகாணக் கல்வியமைச்சின் சரப் அலுவலகர் ஊடாக, தென்மாகாண பிரதான செயலாளரின் இல 2003.2.13 கொண்ட செலவுத் தலைப்புக்கு செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் அதனை நேர்முகப் பரீட்சையின் போது கட்டாயம் முன்வைத்தல் வேண்டும்.

09. நேர்முகப் பரீட்சை :-

9.1. சாதாரண நேர்முகப் பரீட்சை

சாதாரண நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு 1 – மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம் -

சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அவற்றுக்குச் சார்பாக பிரசித்தம் செய்யப்பட்டுள்ள இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்றும் உடற் தகுதிகளும் பரிசோதித்தல்.

9.2 பிரயோகப் பரிசீலனை

விண்ணப்பதார் மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் 5 நிமிடங்களுக்குக் குறையாத விளக்கக் காட்சியொன்றை சமர்பித்தலே பிரயோகப் பரிசீலனை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு பின்வரும் அடிப்படையில் 25 புள்ளிகள் அதிகபட்ச புள்ளிகளாக வழங்கப்படும்.

| **தொடர் இல** | **பிரயோகப் பரிசீலனையில் புள்ளிகள் வழங்கப்படுவதற்கான அளவுகோல்கள்** | **அதிகபட்ச மதிப்பெண்கள்** | **தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள்** |
|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் அணுகுமுறை | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுநிலை | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்பித்தலின் போது கையாளும் நுட்பங்கள் | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

9.2.1 பிரயோகப் பரிசீலனை நடைமுறை

I. பிரயோகப் பரிசீலனைக்காக ஐந்து நிமிடங்களுக்குக் குறையாத காலம் வழங்கப்படும்.
II. பிரயோகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ள முடியுமான உயர்ந்தபட்ச புள்ளிகள் 25 ஆகும்.
III. பிரயோகப் பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கு ஒவ்வவொரு அளவுகோலுக்கும் ஆகக் குறைந்தது 2 புள்ளிகளாவது பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு 2 - மேற்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கம் -

ஆசிரியத் தொழிலில் மிக முக்கியத்துவம் பெறுகின்ற கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் விண்ணப்பதாரரிடம் காணப்படும் ஆற்றல்களைப் பரிசீலித்தல்.

10. விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

10.1 விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யும் போது பின்வரும் உப இணைப்பு இல. 01 னை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளவும்.

உப இணைப்பு - அட்டவணை 02

| பிரதேச செயலாளர் பிரிவு | இல | | | | |
|---|---|---|---|---|---|
| அக்மீமன | -101 | அக்குரஸ்ஸ | -123 | அம்பலந்தோட்டை | -139 |
| அம்பலங்கொடை | -102 | அதுரலிய | -124 | அகுனுகொலபெலெஸ்ஸ | -140 |
| பந்தேகம | -103 | தெவிநுவர | -125 | பெலிஅத்த | -141 |
| பலபிடிய | -104 | திக்வல்ல | -126 | ஹம்பாந்தோட்டை | -142 |
| பெந்தோட்டை | -105 | ஹக்மன | -127 | கடுவன | -143 |
| போப்பே போத்தல | -106 | கம்புறுபிட்டிய | -128 | லுணுகம்வெகெர | -144 |
| ஏல்பிட்டிய | -107 | கிரிந்த புஹுல்வெல்ல | -129 | ஒகேவல | -145 |
| காலி | -108 | கொடபொல | -130 | சூரியவெவ | -146 |
| கோனபினுவல | -109 | மாலிம்பட | -131 | தங்கல்ல | -147 |
| ஹபராதுவ | -110 | மாத்தறை | -132 | திஸ்ஸமகாராம | - 148 |
| ஹிக்கடுவ | -111 | முலட்டியன | -133 | வலஸ்முல்ல | - 149 |
| இமதுவ | -112 | பஸ்கொட | -134 | தங்கல்லை | - 150 |
| கரந்தேனிய | -113 | பிடபெத்தர | -135 | | |
| நாகொட | -114 | திகொட | -136 | | |
| நெலுவ | -115 | வெலிகம | -137 | | |
| நியாகம | -116 | வெலிபிட்டிய | -138 | | |
| தவலம | -117 | | | | |
| வெலிவிடிய திவிதுர | -118 | | | | |
| யக்கலமுல்ல | -119 | | | | |
| வந்துரம்ப | - 120 | | | | |
| ரஜ்கம | -121 | | | | |
| மாதம்பாகம | - 122 | | | | |

11. நேர்முகப் பரீட்சைக்காக குறித்த தினத்திலே பங்குபற்றாத விண்ணப்பதாரிகள் தொடர்பில் எக்காரணம் கொண்டும் திரும்ப கவனம் செலுத்தப்பட மாட்டாது.

12. அதேபோன்று நேர்முகப் பரீட்சை தினத்தன்று சகல சான்றிதழ்களும் முன்வைக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் பாரமெடுக்கப்பட மாட்டாது.

13. இவ்வறிவித்தலில் இடம் பெறாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யும் முறையில் உள்ள நிபந்தனைகளில் திருத்தம் செய்தல், ஏதாவது வெற்றிடங்களில் ஒரு பகுதியையோ, முழுதாகவோ நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் என்பன தொடர்பான இறுதித் தீர்மானம் எடுத்தல் தென் மாகாண கல்விச் செயலாளரின் விதந்துரைகளுக்கமைய தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

14. இத்தமிழ் மொழி மூல வர்த்தமானி அறிவித்தலில் ஏதாவது தெளிவின்மைகள் உமக்கு ஏற்பட்டால் சிங்கள வர்த்தமானியின் மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும்.

ரங்ஜித் யாப்பா
செயலாளர்,
தென் மாகாணக் கல்வியமைச்சு
2021 செப்டெம்பர் மாதம் 29 ம் திகதி